புதுமையான அறிவியல் முறைகளைப் பயன்படுத்தித் தன் பண்ணையில் கரும்பின் புதுரகம் ஒன்றைப் பயிர்செய்தார். அப்போதைய அரசு தாவரவியல் வல்லுநர் திரு.சி.ஏ.பார்பர் அந்த ரகத்தைப் பாலூரில் அரசுப் பண்ணையில் பயன்படுத்தினார். தென்னிந்திய வேளாண்மைப் பொருட்காட்சிகளில் இவரது கருணானந்தர் பண்ணையின் கரும்புகள் முதற்பரிசைப் பெற்றன. ஆஸ்திரேலியப் பொன்னிறக் கோதுமையையும் இமயமலைப் பிரதேச ரகங்களையும் கூட அவர் வெற்றிகரமாகப் பயிர் செய்தார். இவரது ரோஜாத் தோட்டம் குறிப்பிடத்தக்கது. 22.02.1908இல் அப்போதைய சென்னை கவர்னர் திரு.ஆர்தர்லாலியும் அவரது துணைவியாரும் இவரது பண்ணைக்கு வருகைதந்து இவரது சாதனைகளைக் கண்டு வியந்து பாராட்டினர். இவரது பண்ணையில் பல்வகைக் கனிமரங்கள் ஆங்கில காய்கறிப் பயிர்களையும் பயிரிட்டு நீர் இறைக்கும் காற்றாலை ஒன்றையும் நிறுவினார். சோளம், பஞ்சு, கடலை முதலான பயிர்களைப் பயிராக்கும் புதுமுறைகளைக் கண்டு இலவச வெளியீடுகள் மூலம் தன்னாராய்ச்சிகளைப் பொதுமக்களுக்கு வழங்கினார்.

1911-ஆம் ஆண்டில் மின்சாரத்தால் இயக்கப்பெறும் லாலி அச்சுக்கூடம் அமைத்தார். இவருடைய பெருமைகளை உணர்ந்த இந்திய அரசு இவருக்கு ராவ்சாகிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. திரு.ஜே.பி.பெட்போர்டு ஐ.சி.எஸ். அப்பட்டத்தை அளித்துக் கௌரவித்தார். சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டு ‘நன்மறை காட்டும் நன்னெறி’ என்னும் அரிய நூலையும் ஆக்கியுள்ளார்.

பண்டிதர் ஓர் இசைஞர். அவர் குடும்பமே இசைக்குடும்பம். பழந்தமிழ் இசைக்கும் கர்நாடக சங்கீதத்திற்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்து வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு. திண்டுக்கல் சடையாண்டிப் பட்டரிடம் இசை பயின்றார். தஞ்சையில் குடியேறி பின் ஒரு நாதஸ்வர வித்வானிடம் பயிற்சியும் பெற்றார். பிடில் பயிற்சியும் இவருக்கு உண்டு.

தமிழ் இசை குறித்து 15 ஆண்டு காலம் ஆராய்ந்து ஒரு புத்தகத்தை 1917இல் எழுதினார். இவரது உழைப்பின் விளைவுதான் 1365 பக்கங்கள் கொண்ட ‘கருணாமிர்தசாகரம்’ என்ற அற்புதமான நூல் ஆகும். விபுலானந்த அடிகள் யாழ் நூல் எழுதுவதற்கு இந்நூலைப் பின்பற்றினார் என்கிறார் ரா.பி.சேதுப்பிள்ளை. பண்டிதர் அவர்கள் 1912 மே 27 ஆம் நாள் சங்கீத வித்யா மகாஜன் சங்கத்தைத் தஞ்சையில் நிறுவித் தமிழ் இசையின் உயர்வை யாவரும் உணர வைத்தார். 25.02.1914க்குள் ஆறு மாநாடுகளைத் தன் சொந்த செலவில் தஞ்சையில் நடத்தினார். 20-24.03.1996இல் பரோடாவில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் தன் ஆய்வு முடிவுகள் பற்றி உரையாற்றினார். இவரது கண்டுபிடிப்புகளை இவரது இருமகள்கள் வீணையில் இசைத்துக்காட்டினர். 20.08.1916இல் சங்கீத வித்யா மகாஜன சங்கத்தின் ஏழாவது மாநாடும் தஞ்சையில் நடந்தது.

மேலைநாட்டு இசையுடன் இந்திய இசையை முறையாக இணைக்க அரும்பாடுபட்டவர். இத்துறையில் உறுதுணை புரிந்தவர் ஐரோப்பிய இசையில்

வல்லவரான காலஞ்சென்ற பேராசிரியர் ஏ.ஜி.தஞ்சை பிச்சைமுத்து அவர்களே. பண்டிதர் எழுதிய பாடல்கள் ‘‘கருணாமிர்தசாகரத் திரட்டு’ என்ற பெயரில் 1917இல் வெளியாயின. இசையைக் கற்பிக்க தொடக்கப் பாடங்களைத் தமிழிலேயே அமைத்தார். கீதங்கள், சுரஜதிகள், ஆதிதாள அடதாள வர்ணங்கள் ஆகியவற்றையும் சாகித்யங்களையும் தமிழில் பாடிப்பழகத் தக்கவாறு படைத்தார்.

பரதருடைய நாட்டிய சாத்திரம், சங்கீத ரத்தினாகரம், சுரமேளகலாநிதி, சதுர்தண்டி பிரகாசிகை, சங்கீத பாரிஜாதம் போன்றவற்றை ஊன்றிப் படித்திருக்கிறார் 13 ஆம் நூற்றாண்டில் இந்திய இசை பற்றி சமஸ்கிருதத்தில் எழுதிய காஷ்மீரத்துச் சாரங்கதேவரின் கருத்துக்களைத் தெளிவாகப் பயின்று புரிந்து கொண்டு தன் கொள்கைகளுக்கு ஆதாரமாகக் காட்டுகிறார். சிலப்பதிகாரம், சங்க இலக்கியம், கல்லாடம், தண்டியலங்காரம் முதலிய தமிழ் நூல்கள் கூறும் கருத்துக்களையும், இசை மரபுடையார் கருத்துக்களையும் ஒப்புநோக்கி அதன் பிழிவைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் இசை பற்றிய செய்திகள் இன்றைய கர்நாடக இசைக்குப் பொருந்துகிறது என்கிறார். பொதுவாக 22 சுருதிகள் என்று நிலவும கொள்கையை மறுத்து 24, 48, 96 என்று சுருதிகளை வகுத்தும் தொகுத்தும் தருகிறார். இராகப்பட்டியலில் உள்ள தமிழ்ப் பண்ணை இனம்பிரித்துக் காட்டுகிறார். தமிழ்ப் பண்கள் எவ்வாறு பெயர் மாற்றம் பெற்று வழங்குகின்றன என்று சான்று தந்து விளக்குகிறார்.

அடிப்படைப் பாலை செம்பாலை என்றும் அதற்கு இணையான இராகம் சங்கராபரணம் என்றும் கூறிப் பிற இசையறிஞர் கருத்தினின்று முரண்படுகிறார். இவர் பண்டைத் தமிழகத்தின் இசை இன்றைய கர்நாடக சங்கிதத்தைக் காட்டிலும் மிகவும் பரந்துபட்டது என்ற கொள்கை உடையவர். புதிதாக இராகம் உண்டாக்கும் முறை, அதன் ஜீவசுரங்களையும் சஞ்சாரங்களையும் கண்டுபிடிக்கும் முறை, அந்த இராகங்களுக்கு ஏற்ப பாடல்கள் வரை முடித்திருந்தார். 31.08.1919இல் அவர் இயற்கை எய்தியதால் இவரது மகளார் திருமதி.மரகதவல்லி துரைப்பாண்டியன் தன் தந்தையார் விட்டுச்சென்ற குறிப்புகளின் துணையோடு நூலை நிறைவு செய்தார். ஆபிரகாம் பண்டிதரின் மூத்தமகன் திரு.சுந்தர பாண்டியன் 1946இல் அந்நூலை வெளியிட்டார். அவரது இரண்டாவது மகன் திரு.ஜோதி பாண்டியன் கோயிலில் நடைபெறும் இசையில் எளிமையான இனிமையான ஓசையுடன் (Harmony) கர்நாடக இராகங்களை அறிமுகப்படுத்தியதிலும், அவருடைய இசைக்குழுவில் இந்திய இசைக் கருவிகளுடன் மேல்நாட்டு இசைக்கருவிகளையும் பயன்படுத்துவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தார். மூன்றாவது மகன் திரு.ஆ.வரகுணபாண்டியன் பானர் கைவழி என்னும் ஆய்வுநூலை வெளியிட்டுள்ளார்.

தமிழ்தாத்தா உ.வே.சாமிநாதையர், திரு.பி.எஸ்.சிவசாமி ஐயர், ஐஸ்டிஸ் சதாசிவ ஐயர், டாகடர்.எஸ்.சுப்பிரமணி ஐயர், சங்கீத வித்வான் காயகசிகாமணி முத்தையா பாகவதர் போன்ற பல பெரியோர்களால் பாராட்டப்

பெற்றவர். 1917 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மாண்டேக் துரையை ஆபிரகாம் பண்டிதர் நேரில் சந்தித்தார். இச்சந்திப்பு பற்றி மாண்டேக் துரை தன் இந்திய டைரிக் குறிப்பில் எழுதியுள்ளார். ஆபிரகாம் பண்டிதரின் பரந்துபட்ட ஆர்வத்தையும், பல்துறை அறிவையும் பாராட்டியுள்ளார். தமிழசைப் பெருமைக்கு முதல் குரல் கொடுத்த ஆபிரகாம் பண்டிதரின் பெருமை எழுத்திலடங்காது.

திருமதி. சா. பா. அம்புரோஸ